171

354

354

திரு.ஆர்.சந்திரகாசன்,
ராசிபுரம், சேலம். 1/2
"வைத்திய முறை கட்டு -2,3,4."

Verification Completed
Sunderanandam
7/1/65

தேதி: 29.2.64.

ஓலைச் சுவடியின் பெயர்:- வைத்திய முறை கட்டு-2,3,4."

உரிமையாளரின் பெயர்:- ஆர். சந்திரகாசன்.

இடம்:- ராசிபுரம், சேலம்.

****

வைத்திய முறை

கனி ஏடுகள்.

அஞ்சனக்கல் பற்பம்:-

47. 'அஞ்சனக் கல் சொல்லக் கேளு
உறு புளியஞ் சிறக்ரை குகையாய்ப் பண்ணே.

48. பண்ணவே மேல் மூடி யொன்று செய்து பாங்கான அஞ்சனக் கல் நிறைய விட்டு
ஒண்ணிய மண் சீலை செய்து கெசபுடத்தில் உறுதியுள்ள சங்கது போல் நீறிப் போகும்
தண்ணீரில் போட்டவுடன் மிதக்கும் பாரு சலமான மேக வகை யிருபதுக்கும்
யெண்ணியே தேனதிலே யிருவாயானால் யென்ன சொல்வேன் நீர் போன போக்குத் தானே.

49. தாளக பற்பம்:-

போக்கான தாளகத்தில் நீறு சொல்வேன் புதிய தலையோடு தன்னைப் பொடித்துக் கொண்டு
நீக்கான சுண்ணாம்புத் தண்ணீர் விட்டு நிலையாக வரைத்து தனைக் குகையாய்ப் பண்ணி
வாக்கான மேல் மூடி ஒன்று செய்து ளமாகக் காய வைத்து அதனுக்குள்ளே
பாக்கான தாளகத்தின் கட்டி வைத்து பரிவாகச் சீலை செய்து உலர வைய்யே.

50. உலர்ந்த பின்பு குக்குடத்தில் நீறிப் போகும் உத்தமனே தாளகத்துக் கொப்பு முண்டோ
மலர்ந்ததொரு மல்லிகைப் பூப் போலாம் வெள்ளை மாசற்ற வெள்ளை தன்னை வைத்துக் கொண்டு
அலர்ந்த மலர்த் தேனதிலே கொள்வீராகில் அரிதான சயரோகம் மந்தார காசம்
கலந்த கப பிருமேகம் மாந்தை யீளை கை கடந்து ஓடிப் போம் கண்டு கொள்ளே.

51. கண்டு கொண்டு மதுபான மறிந்து செய்தால் காணாத கடியென்ற குஷ்ட சொன்னை நோய் குட்டம்
வண்டு கடி யெலி விஷங்களெல்லாம் தீரும் மைந்தனே மதுபான மறிந்து போடு
பண்டிடைய சொல் சாதிலிங்கந் தன்னை வாங்கி பற்பமாய் நீக்க நின்ற வளமை பாரு
தெண்டிசை பிள்ளைகள் நீக்கப் போமோ செகமெல்லா மிக்க நீர் செப்புரேனே.

சாதிலிங்க பற்பம்:-

52. செய்ததொரு சாதிலிங்கக் கட்டி வாங்கி சிவமூலி வேர்ப் பட்டை அரைத்துக் கட்டி
வெய்யதொரு குகை தனிலே வைத்து மூடி விதமாக சந்து வாய் சீலை செய்து
வைய்யவே குக்குடத்தில் நீறிப் போகும் பரிவாக நிறுத்துப் பாரிலட போகாது
உய்யவே நோயெல்லாந் தீர வேண்டி உரைப்பான அநுபான மொன்று கேளே.

83. ஒன்று தான் தேனிற் கொள்ள உறுதியாங் குன்மம் வாய்வு
பண்டுள்ள சன்னி வாதம் பாரிச வாய்வு சூலை
வென்றிடு பிருத்ம வீளையிளைப்புடன் விரைந்து போகும்
நன்றாக சுரமுந் தீரும் கபங்கமும் கட்டாதங்கே
உண்டிடு மதுபானங்கள் உகந்து நீ கடந்திடாயே.

84. வீர பற்பம்:-

உகந்துடன் வீரபற்பம் உரைக்கிறேனுறுதியாக செகந் தனில் ~~[illegible]~~ லைப்பாய மூலிகைக் கிள்ளு
சினைக்குகையாய்ச் செய்து மிகுந்த நல் வீரந் தன்னை இசையவே குகைக்குள் வைத்துப்
பகர்ந்திடுஞ் சில்லைப் போட்டுச் சீலையும் பரிவாய்ச் செய்யே.

55. செய்திடு புடமே போடத் தீர்க்கமாய் நீறிப் போகும்
மெய்யதின் தேனிற் கொள்ள யிரு பணவிடையதாக

அய்யது சூலை குன்மம் வாய்வு மகன்று போகும்
பொய்யது வல்லக் கார போக்கினை விரைந்து கேளே.

61. ரசு சுன்னம்:-

காயமே பலத்துப் போகும் சுரமது வத்துப் போகும்
வாயினில் போகந் தீரும் வருந்திய கபமும் போகும்
மாயமா வாய்வு போகும் மலஞ் சலக் கட்டும் போகும்
நேயமாய்க் கண் துலங்கும் நிச்சயமிது சொன்னோமே.

62. நிச்சயமாகச் சொன்னோம் நீலமாந் ரசு போக்கு
வச்சதோர் லங்கத்தோடு மிடைக்கிடை யிரதமும் வார்த்து
மெச்சு மிந்திடைக்கு நல்ல வெடியுப்புக் கடக் கட்டி
உச்சிதமாகப் நீராலே உறவரைத்துலர வாட்டே.

63. வாட்டமா மோட்டில் வைத்து வளையவே சீலை செய்து
திட்டமாய்க் குக்குடத்தில் சென்றிடச் சுண்ணமாகும்
முட்டவே சிவந்து போனால் முறைப்படி உப்பைக் கட்டி
வட்டமா யரைத்து முன் போல் புடமிட மகத்தாஞ் சுண்ணம்.

64. சுண்ணத்தை வாய் நீராலே சுற்றியே அரைத்துக் கொண்டு
அனத்தை அரிசிக் கட்டி யப்பியே ரவியில் போடு
முன்னெத்த மூன்று நாளில் முழு வெள்ளையாகு மாகும்
பொன்னெத்த சீலை செய்து போட்டிடு காடை யொன்றே.

65. யென்றிதை யெடுக்கப் பாரு மியல்புள்ள சுண்ணமாகும்
கண்டிதை கண்ட பேர்க்கு கலி யெல்லாம் நீங்கிப் போகும்
பண்டிதை ரசத்துக்குக் கால் பணவிடை யாக்கெஞ் சுகம்
மண்டிது கொண்டு போடு வாயினிழுமி நீராலே.

66. வாயினிழுமி நீராலே மத்திச்சு உருட்டிக் கொண்டு
காயினிழுமி நீராலே மத்திச்சு உருட்டிக் கொண்டு
காயினிழுமிப் போட்டுள்ளே கரியினிழுருக்கிக் கொண்டு
தாயினிலாயி பாதந் தன்னையே வணங்கி நித்தம்
மாயினிமிதனைக் கொண்டு ஆடலாங் கவர்கள் கோடி.

67. கோடியென்றுரைத்தேன் கோடா கோடியு மிதற்குள்ளாகும்
வாடியே மயங்க வேண்டாம் வைத்திடும் ரசு சுண்ணம்
தேடியுங் கிடையாதய்யா தெருவெல்லாங் கிடக்கு சோல்
பாடியும் படித்து மென்றும் பாரினில் நூல் கிட்டாதே.

68. கிட்டாதே போனதேதோ கிடைத்தவர் கொடுக்க மாட்டார்
கட்டாச்சு தந்த பேர்கள் காலினில் விழுந்து போற்றி
செட்டாக யிருக்கலாகா திரவியஞ் செய் ~~[illegible]~~ வதென்று
முட்டாளாய்ப் போகாமல் தான் மனது கர் முறையாய் வாங்கே.

69. பொன்னிமிளை பற்பம்:-

வாங்கு பொன்னி மிளை பற்பம் வளமையாய்ச் சொல்லக் கேளு
ஊங்கியே அசீரண பட்டை ளுதா யிடித்துக் கொண்டு
காங்கிதை மேலிட்டு கட்டியை நடுவே வைத்து
ஓங்கியே சட்டில் வைத்து ஒடு மேல் ஒடு மூடே.

70. மூடியே சீலை செய்து முக்கியம் கெசபுடத்தில்
சாடியே நீரில் போகும் தளம் போல் வெண்மையாகும்
கூடியே வாய்வு போகும் சூலை குட்டந் தோடிப் போகும்
நீடிய குன்ம மெட்டும் நீலை உந்தேர்குள் காணே.

71. [illegible]
[illegible]
[illegible]

ரா. சந்திரகாசன்.
செல்லசராசிபுரம்,
சேலம்.

வைத்திய அட்டவணை கட்டு-3".

தேதி: 29.2.64.

*********** *** *************

முதல் ஏடுகள் சிதைந்துள்ள விடப்பட்டன.

சகல கடிக்கு மருந்து:-

நீருமி கொட்டை பலம்.23, செங்கொட்டை பலம்.23, எள்ளு பலம்.41, கப்புட்டி பட்டை ஆள் படி.௧, பாலொடுவை அரைத்து சாந்து தேங்காயளவு தனித் தனியே இடித்து மறுபடி எல்லாம் சேர்த்து இடித்துக் கொண்டு புன்னைக் காயளவு அந்தி சந்தி தின்னவும் குணமாம்.

பெருவியாதிக்கு மருந்து:-

செங்கொட்டை சேர்.4, நீரு நெட்டிக் கொட்டை சேர்.4, எட்டிக் கொட்டை சேர்.4, வேப்பங் கொட்டை சேர்.4, பாம்புக் கோவைக் கிழங்கு, பேய்ச் சுரைக் காய், பேய்ப்பீர்க்கங்காய், சிறு குறிஞ்சா, நிலவேம்பு, சிவனார் வேம்பு, பாலொடுவை பெரிய கோவைக் கிழங்கு பசுவின் கோமியத்தில் கசாயம் பண்ணித் திரும்பக் காய்ச்சி பசுவின் பால், தயிர், நெய், கடுக்காய்ப் பொடி நிலவாகைப் பொடி, கருங்காலிப் பட்டை, பொடி இவையும் கசாயத்தோடே போட்டு லேகியம் பண்ணி நெல்லிக்காய் பிரமாணம் மண்டலங் கொள்ளவும். மேலுக்கு எண்ணை அரளி வேர் எரிச்சுப் பூசி வெந்நீர் விடவும்.

குஷ்டம், செவ்வட்டை கடிக்கு மருந்து:-

செங்கொட்டை.3, நீருமி முத்து.4, குவளை விரை.2, சோமவேர் பலம்.20, விடத்தலை வேர் பலம்.10, கருங்காலி வேர் பலம்.10, பெருமரப்பட்டை பலம்.10 இதுவெல்லாம் வெள்ளாட்டுக் கோமியத்தில் ஊற வைத்து பழம் பானையில் வைத்து ஒரு மண்டலம் ஏடு விராகனிடை பொரிமாவில் கொள்ளவும். பத்தியம் பாலும் சோறும்.

குட்டத்துக்கு கடிக்கு தயிலம்:-

ரசம் பலம்.௧, கெந்தி பலம்.௧, இது இரண்டும் ஒரு சாமம் அரைத்து தினம் இரண்டு பணவிடை பசுவின் நெய்யில் கொள்ளவும். கை கால் வளரும். கை கண்டது.

கடிக்கு தயிலம்:-

கொடிவேலி வேர், களக் கொட்டி, எருக்கு வேர், சங்கு சங்கம் குப்பி வேர், மேனி வேர், தும்பை வேர், யெட்டி வேர், புலரசு, யிலுப்பைப் பட்டை, பெருமரப் பட்டை இரண்டு சாதியும் புங்கு வேர், ஊமத்தம் வேர், சின்னி வேர், புரசம் வேர் கருநொச்சி வேர் மாவிலிங்கு வேர், சித்தாமுட்டி வேர், பேருமுட்டி வேர், குமள் பிரண்டை, சடைச்சி வேர், முருங்கை வேர், சிவனார் வேம்பு, முக்காவேளை, நாய் வேளை, நல்ல வேளை கண்டங்கத்திரி, நீர் மேல் நெருப்பு, முத்தின வேப்பம் பட்டை, ஆதண்டை, ஆடு தின்னாப் பாளை வேர், சிறு செருப்படி, பெரு செருப்படி இடந்த மூலிகை யெல்லா பிடித்து பெரிய பானையில் போட்டு நிறையத் தண்ணீர் விட்டு மூன்று நாள் எரித்து அந்தக் கசாய மிறுத்துக் கொண்டு நீருள்ளி முத்து படி.6 இடித்து கசாயத்தில் போட்டு எரித்து யெண்ணை வடித்து செங்கொட்டை சேர்.உ, விருமராக்கிசி விரை படி.௧, சேத்து வடிக்கவும். இந்த எண்ணையில் கெந்தி பலம்.உ, ரசம் பலம்.உ, பச கற்பூரம் பலம்.உ, வீரம் பலம்.௧, கெவுரி பலம்.௧, தாளகம் பலம்.உ, சாரம் பலம்.உ, இவைகள் பொடி பண்ணிப் போட்டு யெரித்து அந்தி சந்தி சாப்பிடவும். உப்பில்லாப் பத்தியம். குட்டம் தீரும்.

கடிக்குத் தயிலம்:-

கொடுஞ்சி வேர், பிரப்பம் பட்டை, கிளா வேர், அளிஞ்சி வேர், நிலக் குமிள் வேர், பேய்பாவட்டை யெருக்கம் வேர், தாழை வேர், கழுக்கொடி வேர், பீர்க்கம்

விரை.3, எட்டிக் கொட்டை வீசை.½, கடுக்காய் விராகனிடை.½, கொட்டை யெல்லாம் தயிலம் வைத்து வேர் வேறு தயில மிறக்கி இரண்டும் சேர்த்து பொரி மாவில் விட்டுச் சாப்பிடவும். கடும் பத்தியம்.

இதுவும் கடிக்கு:-

சித்திரமூலம் பச்சையாக நறுக்கி அரைத்து சிறு விளாங்காய் மாத்திரம் எருமைப் பால் குழியில் கரைத்துக் காய்ச்சிப் புரை குத்திக் கடைந்து வெண்ணை எடுத்து அந்தி சந்தி அந்த மோரை நாழி மோர் கிட்டக் குடிக்கவும். சோத்திலே வெண்ணை பாக்களவு கூட்டிச் சாப்பிடவும். மத்த வெண்ணையை மேனிக்கு பூசிக் குளிக்கவும். இந்தப் படி ஐந்து சந்தாயம் பத்து நாள் செய்யவும். கை கண்டது.

கடிக்கு:-

துளசிப் பட்டைச் சாறு உரி. ஒரு கறண்டி விளக்கெண்ணை காய்ச்சி விட்டுக் குடிக்கவும். வாந்தி யெடுக்கும். பயமில்லை. உப்பு தள்ளவும்.

எலி கடிக்கு:-

அரைப்பு அரைத்துக் கரைத்துத் தெளிவிறுத்து இரண்டு நாள் குடிக்கவும். எலி கடி தீரும்.

எலிகடி எரைப்புக்கு:-

எலி யாமணக்கு யிலை இரண்டு பாக்களவு அரைத்து உழக்கு அரிசி ஊறப் போட்டு ஒரு கறி மிளகு கூட்டி அரைத்து அடை சுட்டுத் தின்னவும். வாந்தி யெடுத்து வயறு பேதியாகும். கஞ்சி காய்ச்சிக் குடிக்கவும். 3 நாள் கொடுக்கத் தீரும்.

உஷ்ண வாய்வுக்கு:-

மிளகு, திப்பிலி, மூலத் தலை சுக்கு ஓமம், ஆய்பட்டை, முக்காவேளை வேர் இது சூரணம் பண்ணி சாப்பிடவும் தீரும்.

பெருவியாதிக்குத் தயிலம்:-

விளாம் பொறும்பு கலம், பேய்ப்பீர்க்கம் விரை.[ரூ], வேப்பம் வயிரம் இடை.க, நாயுருவி விரை.[ரூ], ஆடுபவேர் பலம்.30, அழிஞ்சி வேர் பலம்.10, நீருள்ளி முதல் படி.க, கடுக்காய்.100, குப்பை மேனி வேர் பிடி இது வெல்லாம் தயில மிறக்கிக் கொள்ளவும். கருங் குறுவை மாவிலுருட்டி முழுங்கவும். சிறுகச் சிறுக முழுங்கவும். இரண்டு மாதம் சாப்பிடவும். இரு நேரமும் சாப்பிடவும்.

கிருணிக்கு:-

திப்பிலி, மிளகு, சாதிக்காய், பத்திரி, அசமதாகம், மிலவம் பிசின் புளியங் கொட்டைத் தோல் அதிவிடயம், கிராம்பு இது வெல்லாம் வகைக்கு விராகனிடை.க, அபினி விராகனிடை.உ, கூட்டிக் கஞ்சாயிலைச் சாறு விட்டரைத்து மாதளங் காய் விரை வாங்கிப் போட்டு அதிலே இது வெல்லாம் போட்டடைத்துச் சாணி அப்பி புடமிட்டு எடுத்தரைத்துக் கொண்டு குன்றிப் பிரமாணம் உருண்டை பண்ணி எருமைத் தயிரிலே ஒரு உருண்டை கொடுக்கத் தீரும்.

பிளிக் குடிச்ச நாள் மாச மூன்று மாசக் கிருணிக்கு:-

மிளகு பிடி.க, சீரகம் பிடி.க, பண்டு உரித்த பருப்பு படி.க, முடக் கொத்தானிலை பிடி.க, இந்த நாலும் சட்டியில் வைத்து எருமை வெண்ணை கூடப் போட்டு மருந்து முறு முறு என்கிற பதத்தில் எடுத்து தின்னவும். அன்றாடம் வறுத்து தின்னவும். இந்தப் படி மூன்று நாள் தின்னவும். உப்பு, தள்ளவும்.

இரத்தம் கண்ட மூலக் கிருணிக்கு:-

நாயுருவி யிலை குத்து.க, ஈர வெங்காயம் குத்து.க, சீரகம் பலம்.க, அசமதாகம் பலம்.க, குடசப்பாலை பட்டை பலம்.க, லிங்கம் விராகனிடை.க,

இது வெல்லாம் எண்ணெயில் கரைத்து எரித்து அந்தி சந்தி ஒரு கரண்டி கொடுக்கவும்.

<u>வேறு மருந்து</u> :-

சாதிக்காய் விராகனிடை.உ, பத்திரி விராகனிடை.உ, கிராம்பு விராகனிடை.உ, அதிவிடயம் விராகனிடை.உ, அபினி விராகனிடை.உ, கஞ்சா விராகனிடை.உ, சாஸ்திர வேதி விராகனிடை.உ, மாதளங்காய் சிறுகத் துண்டித்து விரை போக்கி மருந்து யெல்லாம் அடைத்து சீலை மண் செய்து புடமிடவும். பிறகு வெள்ளாட்டுப் பால் வார்த்தரைத்து [illegible] விளங்காய் மாத்திரம் உருண்டை பண்ணவும். கடுப்புக்கு வட்டுக் கருப்புட்டியில், பவள் கழிச்சலுக்கு வெண்ணெயில், கிருணிக்கு வட்டத் திருப்பிக் கசாயத்தில் அந்திக்கு உருண்டை.உ க்கா மே:உ கொள்ளவும். உப்பு, புளி ~~[illegible]~~யாகும். மாமிசம் தள்ளிப் போடவும்.

<u>வேறு மருந்து</u> :-

பாவட்டை புல்லு நாயுருவி வேர் நுணயீர்க்கு வட்டத் திருப்பி வேர், பெரு மரப் பட்டை, பேய்ப் பாச்சுத்தி பேய்மிரட்டிக் தண்டு வெதுப்படிக் தண்டு முக்கா வேளை யிந்த ஒன்பது வகைக்கு பலம்.க, பதக்குத் தண்ணீர் விட்டு நாழியாகக் காய்ச்சிப் பிசைந்து புளிந்து கொண்டு கிராம்பு, சாதிக்காய், அதிவிடையம், இலவம் பிசின், விளாம் பிசி,வ ரிந்துப்பு, கருஞ்சீரகம், ஓமம், சுக்கு, மிளகு, திப்பிலி, அபின், கஞ்சா வகைக்கு விரா கனிடை.உ, வறுத்துப் பொடி பண்ணிக் கசாயத்தில் போட்டுக் கிளறி உருண்டை பண்ணி எருமைத் தயிரில் கொடுக்கவும் கிருணி தீரும்.

<u>வாத கிருணிக்கு</u> :-

அந்தி காந்தம், அதிவிடையம், அபினி கிரும்பு ஒத்த கடுக்காய், திரிகடுகு ஓமம் காயம் யிந்துப்பு, சித்திமுலிச் சாத்திலரைத்து தேத்தாம் கொட்டைப் பிரமாணம் உருண்டை பண்ணி பத்தில் மீதில் தயிரிலிடப பறிக்கும் வந்த கிருணிகளே.

<u>இதுக்கு உரை</u> :- ஆனைத் திப்பிலி, காந்தம், அதிவிடையம், அபினி, கிராம்பு, சாதிக் காய், சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், பெருங்காயம், இந்துப்பு இந்தப் பதிமூன்று மருந் தும் கஞ்சா யிலைச் சாறு விட்டரைத்து தேத்தாக் கொட்டைப் பிரமாணம் உருண்டை பண்ணித் தயிரில் கொடுக்கவும். பத்தியம். ~~புளி - புடிக்க - அரையில்~~

<u>~~புளி புடித்த~~ அரையில் கழிச்சலுக்கு</u> :-

ஒரு சிறங்கை மிளகு வறுத்து ஆர்க்கப் பொடி பண்ணி நல்ல வெல்லம் ரண்டு நறைகுவித்து ஒரு கரண்டி நல்லெண்ணை காய்ச்சி ஐத்திப் பொடி செய்யவும். அளவு அந்தி சந்தி மேவிரல் கொண்டது சாப்பிடவும். பிறகு அதிகமா யெத்தி யெத்திக் கொள்ளவும். பத்து நாள்க் கொள்ளவும். எருமைத் தயிரும் சோறும் சாப்பிடவும். அரையில் கண்டால் தயிர் தள்ளவும்.

<u>கிருணி கழிச்சல் சகலத்துக்கும்</u> :-

சுக்கு பலம்.10, சீரகம் பலம்.உ, மல்லி பலம். சர்க்கரை பலம்.½, நல்ல எலுமிச்சம் பழம்.20, தேன் உரி, சுக்கை பழச் சாறு விட்டரைத்து சீரகம் மல்லி, வெவ்வேறே அரைத்து ஒன்றாய் சேர்த்து சர்க்கரை சேர்த்து நல்ல எண்ணெயில் வடை தட்டி வெந்த பிறகு தேன் வார்த்து அரைத்து கிளறி அந்தி சந்தி சாப்பிடவும். எலுமிச்சம் காயளவு சாப்பிடவும். பத்தியம் மொந்தன் கச்சல் கூட்டவும். அத்திப் பிஞ்சு கூட்டவும். சகல வயறு கழிச்சலுந் தீரும்.

<u>இருப்பவல் தயிலம் : எறண்டெண்ணெய்</u>.

பதமாக முழுசி வரத் தீரும். நோய் சேள் படு பாவை வாத மெல்லாம் பறந்து போகும்
யிதமாக யிவ்வொரு தயிலஞ் சேரு யிடித்திருவா யிருப்பல்ல தான் பலம் நாறப்பா
சிதமாக ஞானி நீர் தன்னில் போட்டு சிறக்கவே யெட்டொன்றாய் வடித்துக் கொண்டு
சுகமாக எறண்டத் தெண்ணெ படி விட்டு நாளாவு மயமஞ்சள் நாவிப் போட்டு கிண்டே.

147. கிண்டியே வடித்திடுவாய் மெழுகதாகுல் கெடி கல்சி ஓடி விடும் வாத
மெல்லாம்
பண்டிதற்கு யிம்முறைகள் பாடமுண்டோ பார்ப்பதற்கு வெகு சுருக்குப் பரிந்து
பாரு
கண்டிதமாய்ச் சொல்லி விட்டேன் சுருக்கு மெத்த கதி கெட்ட நோயாளி
நோய் தீரத்தான்
உண்டு கொண்டு யிருப்பதற்கு சொறணமுண்டு உறுதி யிந்த நல் முறையை
உன்னிப்பாரே.

148. <u>பொன்னுங்காணி கிருதம்</u>:-

உன்னியே யின்னமொரு செதி கேளு உன்றனுக்கு தயிலமொரு கிருதஞ் சொல்வேன்
கானியா பொன்னுங்காணி வேர் பலந்தாஞென்று கைமான் வெட்டி வேர் விலாம்
மிச்சை வேர்
புளியே அரிதல வேர் சிறுகீரை வேர் புகழாக வகைக்கு வேர் பலம்தாக
பாணியே பால் வார்த்து அரைத்து நெய்யில் படிரெண்டுக்குள்ளிட்டுக் காச்சு காச்சே.
149. காச்சியே உள் கொள்ளக் கறண்டி வீதம் கலரேகம் பதினெட்டும் காணதோடும்
மாச்சுதே உடல் சுரங்கள் அகன்று போகும் அறுகாது உஷ்டணங்கள் சுரமு மேகம்
போச்சுதே வறட்சியொடு உள்ருரேகம் புண்ணுல அக்கரங்கள் போகுஞ் சொன்னேன்
ஏச்சுதே யென்னுதே யிடு சாதிக்காயினிறையன அதி மதுர மாச்சக் காயே.
150. காயொன்று வகை யொன்று களஞ்சி யொன்று கரைத்திடுவாய் காச்சு முன்னே
நெய்யிற்குள்ளே தாயென்று யின்னமொரு கிருதஞ் சொல்வேன் சதாவேரிக் கிழங்குடனே
சாறு நாழி
வாயென்ற திரிகடுகு திரிபலா வகை வீதம் களஞ்சி யொன்று நறு நெய் நாழி
யேயென்ற யெரியிட்டு மெழுகுதாகுல் யிறக்கியே வடித்திடுவா யியல்பு தானே.
151. யியல்பாகக் கொடுத்திடுவாய் கறண்டி வீதம் யெடுத்தொரு கரப்பனெல்லா
மியல்பாய்ப் போகும்
முயலான நீர் விஷங்களெல்லாந் தீரும் முளங்கின தோர் வாய்வோடு மிரச்சல்
தீரும்
முளங்கின -தேசச் சிலமான பித்தமொடு சிலேற்பனங்கள் செவியிருமல் கிறுகிறுப்புச்
செரியா மந்தம்
மயலான சிருமிகளும் அத்தப் போகும் அதிகமா (மேல் தொடர்ச்சி யில்லை).

Incomplete

<u>புளியாரை நெய்</u>:-

புளியாரைச் சாறு படி.4, பசுவின் நெய் படி.உ, அத்திப் பட்டை, நாகப் பட்டை மாம்பட்டை இந்தச் சாறுகள் வகைக்கு படி.3, திரிபலை, திரிகடுகு, அரத்தை, சதகுப்பை, மல்லி குடசப் பாலை, சாதிக்காய், கிராம்பு, வசுவாசி, பெருமரப் பட்டை, அதிவிடயம், யிலவம் பிசின், முத்தக் காசு, ஆயிப்பட்டை, செவியம், செவ்வியநீர் பட்டத் திருப்பி வகைக்கு களஞ்சு.3, அரைத்துப் போட்டு மேன் பொடி அதிவிடயம் போட்டுக் காய்ச்சி சாப்பிடவும் எல்லாக் கிரணிக் கடுப்பு, ரெத்தக் கடுப்புந் தீரும்.

<u>கழிச்சலுக்கு அபின் குளிகை</u>:-

அபின் பலம்.உ, கஞ்சாயிலைச் சாறு 3/4, சிறுகச் சிறுக விட்டரைத்து தேத்தாங் கொட்டை அளவு உருண்டை பண்ணி வெல்லத்தில் கொடுக்கவும்.

<u>தூதுவளைக் கிருதம்</u>:-

153. யீரெட்டுக் கரப்பனுடன் சிரங்கு குஷ்டமும் யியம்புகிறேன்
கிருமியுடன் சீரணங்கள் நாடாது கிறந்தியொடு கிரணி மூலம்
யெப்போதும் நாடாது புவியிலுள்ளோர்க்கு யின்னமொரு கிருத வகை யியம்பக் கேள்.
154. இயம்பக் கேள் தூதுவளை பலந்தான் பத்து யியல் கண்டங்கத்திரி தான் பலந்
தான் பத்து
சுயமான துளசி யது பலந்தான் பத்து தோத்தியத்தோர் தோடை பலம் பத்து
தாகும்
நயம் பெறவே விஷ்ணுகிறந்தி பலம் பத்தாகும் நன்றாகப் பிரமியது பலம் பத்
தாகும்
செயமாக யிதை யிடித்து தாஙி நீரில் திறமாக யெட்டொன்ற யிறுத்து வாங்கே.
155. யிறுத்து விட்டு என்னவேயோ நெய்யுங் கேளு யிதமான சித்தரத்தை திப்பிலி யென்று

வருத்திட்டு வகைக்கு யரைப்பலம் பத்தாக வடி மெழுகு போலரைத்து சேர்த்துக் கிண்டி
முறைத்திட்டம். போகாமல் வடித்துக் கொண்டு முக்கியமாய்க் கறண்டி நிறை யெடுத்துக் கொண்டு
உரைத்திட்டுக் கொண்டாக்கால் தீரும் நோய் கேள் உத்தமொ யிருமலெல்லா மோடிப் போமே.

156. ஓடிப் போம் தேன் கூட்டிக் கொண்டாயாகில் வரு செயங்களிலுப்பீல் தபப்புக்
க்கல்
நாடிப் போம் வாய்வோடு கபக் கட்டெல்லாம் நாடாமல் ஓட விடும் நளினமாகும்
தேடிப் போம் திரிகடுகு நெல்ப் பொரியுங் கூட்டி தேனிலே தின்று விடு திருதம் சேர்த்து
தேடிப் போம் கொண்டிடவே சொன்ன நோய்கள் செயமாகு மென்றருளிச் செய்தவாறே.

157. <u>சன்னிக்குத் தயிலம்:-</u>

செய்தபடி சன்னிக்குத் தயிலமொன்று செப்புகிறேன் வசம்புடனே வெள்ளை உள்ளி
உயதமுள்ள அவுரி வேர் முசுறின் முட்டை உரப்பான புகைகங் கோழி முட்டை
உய்தமுள்ள வேப்பெண்ணெ புங்கெண்ணெ வகைக்கு நாழி நிறையாக வகை வகைக்கு ஒரு பலமாய் சேர்த்து
பெய்யுகின்ற ஆமணக்கு யெண்ணெ நாழி பேறுக விட்டதிலே வடித்துக் கொண்டு.

158. கொண்டு விட யெண்ணெக்கு கிளியைக் கேளு கூறுக சுக்கிடித்துக் கிளியாக கட்டி
நின்று விட்டு சுட வைத்துக் கிளியைக் காச்சி நிலைபமாய் குத்தி விடச் சன்னி போகு
நின்று செய்யும் வலியஞ்சும் சிகரிப் போகும் தீராத சன்னிக்கு உள்ளே கொள்ளு
என்று எட்டு நாளைக்குத் தீருமென்று எளிதாக யித் தயிலம் யியம்பினேமே.

159. <u>மகோதரம் பெருவயறுக்கு தயிலம் குழம்பு:-</u>

ஐய்ம்புகிறேன் வகையொன்று சொல்லக் கேளு எருக்கிலையின் பாலுடக்கு
கள்ளிப் பாலுடக்கு சுயமான நல்ச்சாரம் களஞ்சி பத்து சுகமாக விட்டரைத்து மெழுகதாக
நயம் பெறவே ஆமணக்கின் யெண்ணெ சேர்த்து நலமான செம்பதனிலடைத்துக் கொள்
சயமான பெரு வயறு மகோதரங்கள் தளமான நீரும்பல் விஷபாத மென்னே.

160. பாகமாய் மிளகள்வு குன்றி முத்துப் பகருகின்ற சுண்டைக்காய் வீதங் கொள்ளு
வேகமாக் கிருமிகளும் பல பேதங்கள் விட்டு விட வேணு------
~~ஏழு~~ விஷங்களெல்லாம் நாடாது பேதித்து வாங்கிப் போகும்
யேகமாய் யிம் மருந்து கொண்டாயாகில் யேழு நாள் பால் கொள்ள யியல்பதாமே

161. <u>மேனிச் சூரணம்:-</u>

கருஞ்சீரகம்
தாமென்ற மேனிச் சூரணமே செய்து தான் <u>கரியான் சீரகமும்</u> சூரணித்து
ஓமென்ற நாற்பது நாள் கொள்வீராகில் ஓடாத வாய்வோடும் மந்த மெல்லாம்
சாமென்ற தீவனங்கள் நன்றாய் வாங்கும் சிரத்திலே மந்த மெல்லாந் தவமண்டே போம்
போமென்ற சில் விஷங்கள் எல்லாந் தீரும் புகழமை சேர் அக்கினி குமாரப் பொதியிதாமே.

162. <u>சீரக சூரணம் பிறமேகம் சகலத்துக்கு:-</u>

பொடியான பொடி யொன்று சொல்லக் கேளு புகழான சீரகமோ பலந்தானென்
செடியான் அவுரி தன் பொடி பலந்தானென் செஞ்சந்தனப் பொடி பலந்தானென்று
வடியாக வடி கொண்டு வைத்துக் கொண்டு வளமான நறு நெய்யில் குழைத்துக் கொள்ளக்
அடியான உடங்களங்கள் உள்ளுரேகம் சுருக்கான நீர்க் கடுப்பு பிறமேகங்கள்.

163. மேகமொடு உள்க் காச்சல் எரிவு காந்தல் வியருக வேரித்த குன்ம மெல்லாம்
போகமுறு எரும்புருக்கி தசை யடைப்பு பொல்லாத நீர்க் காகம் புண்ணு நெஞ்சில்
வேகமுறு வாய் நாக்கு மேல் நாத்தங்கள் விட்டோடிப் போவதற்கு விருதி போட்டு
கூகை நீர் கஞ்சாவும் சாதிக்காயும் கூட்டுவா யவிரி குபாசாணி யோடும்.

164. குபேருசாணி வகை யொவ்வொரு பல மொன்றப்பா குணமாகவே வறுத்துச் சூரணித்து
நீபாசாணியான குபனத்தோடே நேபால கருவேம்பின் சூரணமுஞ் சேர்த்து

ஊர் சாணி வாழைப்பூ புட்டவியல் வைத்து உருகவே புளிந்து சாறு தனிலே கொள்ள
முபாசாணியான தொரு கடுப்பு உளைச்சல் மூலத்தின் கிருமி யொடு முளங்குவாய்வு.

165. முளங்கவே வகையொன்று சொல்லக் கேளு முதண்ட கொடிவேலி சூரணித்து
விளங்கவே படியொன்று சீனப்பாவு வீருகப் படி யொன்று மேவிக் கூட்டி
களங்கமறக் கார்கோலரிசி படியொன்று கருஞ் சீரகத்துடனே நற்சீபகமும் கூட்டி
புளங்கவே வகை யொன்று படி யொன்றுக புனிதமாய் சூரணித்து புகழ்ந்து வைய்யே.

166. வைத்திட்ட சூரணந்தான் தேனில் கொள்ள வருஞ் சீலை கிரந்தி குட்டம்
வாத வாய்வு வெத்தி----டு கடி வெ---ப்புளு வெட்டு விஷகடி --போகும்
கைத்திட்டமாகவே சொல்லி விட்டேன் ஊமான மிளகு நீர்க் கசாயங் கொள்ளே.

பிள்ளை உண்டாக மருந்து:-

167. கொள்ளவே மண்டலத்தில் தீருந் தீரும் குணமாக யின்னமொரு வகையைக் கேளு
பிள்ளையில்லாதவர்க்கு மருந்து கேளு சொல்வேன் புகழான பேய்க்குமட்டி வித்து நேர்வாளம்
உள்ளபடி சரி சமமாய் குளித் தயிலம் வாங்கி உரு மஞ்சள் பொடி யதனில் சொன்றுக
வள்ளலெனுந் தயிலமது கா சொன்றுக மத்தித்துக் கொண்டு விடக் கெர்ப்ப வாழ்வே.

~~168.~~ (இடையில் உள்ள ஏடுகள் சிதைந்துள்ள விடப்பட்டன)

177. சுரத்துக்கு குருந்தொட்டி வேர் கசாயம்:-

காட்டுகின்ற குருந்தொட்டி வேர்க் கசாயம் கால் பலமுஞ் சீபக முக்காலாய் கூட்டி
ஊட்டுகிற யிருநாழி நீரில் விட்டு உழக்காகக் காச்சியதை யிரு போதுண்
மூட்டுகிற மூன்று நாள்க் கொள்வீராகில் முறை சுரமும் விஷ சுரமும் மூல வாய்வு
விட்டு விடும் பித்தமொடு வாதந் தீரும் விளம்புகிறேனின்னமொரு வித்தங்கள் தானே.

பித்த சுரத்துக்கு சத்தி விக்கலுக்கு:-

178. விதமென்று வெப்பாலம் சீபகமுங் கூட்டி வீருக வகைக்கு கால் பலமதாக
விதமுடனே யிரு நாழி நீர் விட்டு வெட்டொன்றாய்க் காச்சியே யிறுத்துக் கொள்ள
பதமொன்று வந்த சுரம் பறந்து போகும் படு பாவிப் பித்தமெல்லாம் பறந்து போகும்
மதமென்ற வாய்வெல்லா மகன்று போகும் வகையாக யின்னமொரு வரிசை கேளே.

179. வரிசையுடன் வில்வ வேர் நெல்ப் பொரியுங் கூட்டி வகைக்குக் கால் பலமாக யிரு ----நாழி
வரிசையுடன் யெட்டொன்றாய் வடித்துக் கொண்டாலுடன் வந்த சத்தி விக்கலுடன் போகும்
பிரியமுடனின்ன மொரு கசாயஞ் சொல்வேன் பேரான முல்லை வேர் வில்லை வேரும்
தரிதான சுக்குடனே வகைக்குக் காலாய் கூட்டியே யிரு நாழி நீரில் விட்டே.

180. யிட்டு வைத்து யெட்டொன்றாய் வைத்துக் காய்ச்சி எடுத்து நீ குடித்திடவே விக்கல் வாந்தி
முட்ட விடு பித்த முடனுழலை தாகம் முறையான சுரந் தீரும் மொழிந்தவாறு
சட்டமுடனின்ன மொரு சேதி கேளு தருவான முத்தமொடு விஷந் தீர் கிரந்தி
யிட்டமுடன் காலப் பலமா யெடுத்துக் கொண்டு யிரு நாழி நீரில் விட்டு யெட்டொன்றாக்கி.

181. ஆக்கியே மூன்று நாளிரு போதுண்ணு அகண்ட சயமீளை யிளைப்பதிக மூச்சு
போக்கி விடு யிரிருது மிளகு கூட்டி போட்டு விடு கசாயத்தைத் தேனில்க் கொள்ள
பாக்கியமா யின்னமொரு கசாயஞ் சொல்வேன் பச்சை நெல்லி தான்றியுடன் கடுக்காய் மூன்றும்
நோக்கியே வகைக்குக் கால் பலமதாக நன்னாரியுமா பிளக்கிலே களஞ்சு கூட்டே.

182. கூட்டியே யிரு நாழி நீரில் விட்டுக் குலாயிலே யெட்டொன்றாய்த் தேனுங் கூட்டி
நாட்டியே திரிகடுகு சூரணமேன் பொடியாம் நலமாக யிட்டருந்த சிலேற்பனங்கள்

182. நீட்டியே சுப்பமிளை யிளைப்புக் கக்கல் திரந்தமே சயங்களெல்லா நினைவில் காணும்
ஓட்டியே விடுவதற்கு யின்னமொன்று உரைக்கிறே னுலகத்தோர் பிழைக்க வென்றே.

183. சுரபித்த சிலேற்பனத்துக்கு :-

வென்றதொரு சந்தனமும் விலாமிச்சோடு வெப்பாலை முத்தமொடு சரக்குங் கூட்டி
நன்றென்வே வகைக்குக் கால் பலமதாக நலமாக யிடித்ததனை யிரு நாழி நீரில்
பன்டெனவே யெட்டொன்றாய் வடித்துக் கொள்ள சென்றதொரு சுர வாய்வு சில
தோஷங்கள்

சிரசிலுள்ள பித்த நீர் சிலேற்பன வாதம் போமே.

வேப்பம் பட்டைக் கசாயம் :-

184. வாதமொடு தாகங்கள் நீர்க் கடுப்பு மருள் குடு பித்த காமாலை தீரும்
வேதமுடனின்னொரு கசாயஞ் சொல்வேன் வேம்பினுடன பட்டையொடு மிளகு சுக்கு
நாதமுடன் வகைக்கு கால் பலமதாக நனிமுடனிரு நாழி நீரில் விட்டு
போதமுட னெட்டொன்றாய் வடித்துக் கொள்ளப் புழுக்கிருமி வாய்வு மந்தம் போமே

185. யெல்லாமுந் தீரவே கசாயஞ் சொல்வேன் யிருவேலி மதுரமுடனிஞ்சி கூட்டிச்
சொல்லாமல் வகைக்குக் கால் பலமதாக ஆக்கியே யிரு நாழி நீரில் விட்டு
மெள்ளவே தீ யெரித்து யெட்டொன்றாக்கி விதமாகப் பத்து நாள் கொள்ளும் போது
வல்லதொரு வாய்வு வறும் பித்த சோகை வாங்கி விடும் அரோசிகங்கள் வாரா
தென்னே.

186. பிட்டவியல் :-

வாராமலின்னொரு கசாயஞ் சொல்வேன் மைந்தனே. பிட்டவியல் மார்க்கங் கேளு
தாருவை பேய்ப்புடல் பற்படாகம் தரு கண்டங்கத்திரியுந் துளசி நாவிளை
வர்டா தோடை யிலை சங்கங் குப்பி பருவ முறு திப்பிலியு மிளகுங் கூட்டிச்
சேரக் வகைக்கு ஒரு பிடியதாக சேர்ந்த மருந்தொரு களஞ்சியாய் சேர வாங்கே.

187. வாங்கியே யிடித்ததனைப் பிட்டவியலாக்கி வளமாகவே. பிழிந்து கற்கத் தேனும்
ஓங்கியே கொண்டு விடு சிலேற்பனங்கள் உள்ளிருமலுள்ச் சுரங்கள் வாத வாய்வு
நீங்கியே போக வென்று சொன்ன நேர்மை நிச்சயமாயின்ன மொரு கசாயங் கேளு
தாங்கியே முசுமுசுக்கை விஷ்ணுகிராந்தி தன்னுடனே நிலவேம்பு சங்கங் குப்பியாமே.

188. குப்பியுடன் வகைக்கு ஒரு பிடியதாக குணமாகவே யறிந்து சட்டி மீதில்
செப்பமுடனே தலைத்துப் பிழிந்து கொண்டு சேருகிற மருந்து தனை செப்பக் கேளு
ஒப்பமுடன் சீரகமும் சுக்குமாக உடவறுத்துச் சூரணித்து மேலே தூவி.
யிப்புவியில் தேன் கூட்டிக் கொள்வீராகில் யிஷ்டமுடன் வந்த சுர மிடைந்து போமே

189. யிடைந்திடவே யின்னமொரு கசாயஞ் சொல்வேன் யியலான நிலவேரும் யிஞ்சியுள்ளி
மடந்தையபே கொத்தாலும் வேப்ப நெட்டி வளமான நொச்சியிலை வகை பிடிய
தாக கொண்டு

கடந்ததொரு மருந்தெல்லாங் களஞ்சி வீதம் கெருவாகவே யிடித்து அவித்து வாங்கி
சிடந் தனக்குத் தேன் கூட்டிக் கொள்வீராகில் செய்ய சுர சன்னியொடு சிலேற்பன
மும் வாதம்.

190. குலைக்கு விழித் தயிலம் :-

தோற்கவே யின்னமொரு தயிலங் கேளு சுருதியாய் விளி வேர்த் தயிலம் வாங்கி
ஆர்க்கவே யம்மூலி சூரணித்து அதில் குழைத்துக் கொண்டிடவே மண்டலந்தான்
மூர்க்கமுள்ள குட்டமெல்லா மொழிந்து போகும் முடன் வந்து வெள்ப்பெல்லா
மோடிப் போகும்

சேர்க்கவே. யின்னமொரு சேதி கேளு செங்காட்டைத் தயிலமது தேக்கிக் கொள்

191. சிவனார் வேம்பு :-

வாதமொடு சன்னி யெல்லா மாண்டு போகும் வஞ்சகங்களில்லாமல் மருந்து சொன்
னேன்

போதமுடன் கண்ட வகை நல்லோருக்கும் பொய்யென்று சொல்லாமல் பொல்லாப்பாக
வேத முனிந்தரால் வெளியாய்ச் சொன்னேன் வித்தையிலே வெகு வித்தையே கவித்தை
காதமல்ல ஆரமல்ல யிருப்பில் செய்து கனகாசு பாரியுக் யிருக்கலாமே.

192. யிருக்கவே யின்னமொரு சேதி கேளு யியலான சிவன் வேம்புத் தயிலம் வாங்கித்
தருக்கனவே யம்மூலி சூரணித்து தயிலத்தில் குழப்பியே கொண்டாயானால் முருக்கம்
பூப் போலாகு மேனி யெல்லா முளையிலே வெட்டுண்ட புண்ணு மாறும்
சுருக்கியதோர் கால் வெடிப்புக் குட்டஞ் சூலை சுருக்கான கடி விஷமுந் தோத்
துப் போமே.

193. யிறக்கியே பஞ்சாங்கஞ் சூரணித்து யிதில் குழைத்துத் தின்றிடவே யெல்லா நோயும்
பறக்குமடா நரை திரையும் வாராதென்று பகர்ந்திட்டேனின்ன மொரு சேதி கேளு
சிறக்கவே வேம்பிட தயிலம் வாங்கி சராகப் பஞ்சாங்கஞ் சூரணித்து
நீக்கலதில் குழப்பியே தின்றயானால் நங்காத வாத மெல்லா நீங்கிப் போமே.

194. நங்கிய பேர் குட்டமொடு கிரந்தி சூலை நிலையான நரை திரையும் நீங்கி விட்
டோடும்

ஓங்கியே யின்னமொரு சேதி கேளு உறுதியுள்ள தேத்தான் விரைத் தயிலம் வாங்கி
பாங்கியே பஞ்சாங்கஞ் சூரணித்து பரிவான தயிலத்தில் குழைத்துக் கொள்ளே
யேங்கியே வியாதி யெல்லாங் கெடி கலங்கி யிருந்த விடம் விட்டோடும் யிருப்புத்
தானே.

195. யிருப்பான வாலுளுவைத் தயிலம் வாங்கி யியல்பாகக் கொண்டு விட
மண்டலந்தாலும்
கருப்பான நோய்களெல்லாம் ஓடிப் போகும் கை கண்ட வித்தை யித
தயிலப் போக்கு
யிருப்பான பிருயிட்ட தயிலம் வாங்கி கொண்டிடவே யரையாப்புக் குட்ட
மெல்லாம்
பொருப்பான பலவலியு முதலாயுள்ள பொல்லாத நோயெல்லாம் போகுந்
தானே.

196. <u>வெண் புரசுத் தயிலம் பெரு வியாதிக்கு:-</u>
தாவென்ற வெண் புரசு தயிலம் வாங்கி சாதகமாய்க் கொண்டு விடு மண்டலந்
தான்
யேனென்ற பெரு வியாதிக்குட்ட மெல்லாம் யிடைந்து போமிவி தான தயிலந்
தன்னுல்
போர்வென்ற வெள்வேலி தயிலங் கொண்டால் பல்லெல்லா மிறுகி விடும் பண்பதாக
ஆவென்ற உகாயிரட தயிலங் கொண்டால் உளியாய் வியாதி யெல்லா மொழிந்து
போமே.

197. ஒளியவே யின்ன மொரு தயிலங் கேளு உற்ற கருஞ் சீரகமுங் கெந்தகந்தான்
தெளியவே பத்துக் கொன்றுகச் சேர்த்து திரமாகத் தயிலமது வாங்கிக் கொள்ள
வலிய வந்ததொரு சிரங்கு குட்ட வாதம் வாதமொடு சூலையெல்லாம் வாங்கிப்
போகும்
துளி பாயுஞ் சீசலமும் கரப்பான் போகும் தோலுரியுந் தஞ்லனையும் சுத்தமாமே.

198. சுத்தமா யின்னமொரு சேதி கேளு சுருக்கான அழுக்கிறுத் தயிலம் வாங்கி
பத்தமா அந்த வேர் சூரணித்து பாச்சியே கொண்டு விடு மண்டலந்தான்
பித்தமா சூலையொடு சிரந்தி குட்டம் நீங்காத வியாதி யெல்லாம் நீங்கிப் போம்
உத்தொரு சேதியொன்று சொல்லக் கேளு உரைப்பான சீனப்பா தயிலம் வாங்கே.

199. வாங்கெ தயிலத்தின் சூரணத்தைக்குழைத்துக் கொண்டு தளமாக சூலைவகை தவறுண்டே
போகும்
அயிலாத்த விழி மாதே யின்னங் கேளு ஆச்சரியத் தயிலமொன்று அருள் செய்
வோமே.

<u>ஓமம் தயிலம்:-</u>

200. ஓமென்ற ஓமமுடன் வசம்பு கார்கோல் உறவாகத் தயிலமது யெறக்கியேதான்
நாமென்ற திருமூன்று சூரணித்து நலமாக நலமாக அருந்தக் கொள்வாயானுல்
வாமென்ற சன்னியொடு வாதந் தீரும் வருகின்ற குட்டமொடு சிரங்கு தீரும்
தாமென்ற யின்னமொரு தயிலம் சொல்வேன் சாரணையின் வேர் யிடித்துத் தயிலம்
வாங்கே.

201. வாங்கென்ற தயிலமெல்லாம் குழித் தயிலமாக மைந்தனே வாழ்கிறதோர்
மார்க்கமாகும்
தாங்கென்ற சாரணையுஞ் சூரணந்தான் தயிலத்தில் குழப்பியே தளமாய்த் தின்று
தீங்கென்ற வாதமெல்லாஞ் சிதறிப் போகும் திச வாய்வு மல பெத்தந் தீருந்
தீரும்
போமென்ற யித்தனையுஞ் சொன்ன பின்பு புகலுவோம் வெண் தோன்றிக் கிழங்குப்
போக்கே.

202: <u>வெண் தோன்றித் தயிலம் குட்டத்துக்கு:-</u>
கிழங்குதனை நிழலுணத்தி தயிலம் வாங்கி கேளப்பா கிளங்குச் சூரணமுஞ் சேர்த்து
உளங் குளிபத் தயிலத்தில் விரவித் தின்ன ஓடி விடுங் குட்ட மீரொன்பதுந்தான்
களங்க மறத் தீர்ந்து விடுந் தயிலந் தன்னுல் காய சித்தி யுண்டாகுங் கவன
மாகும்
தளம் பெறவே தான் வருஉடங் கொண்டாயானுல் சகல சித்து கை வசமாம்
சஞ்சீவி போலே.

203. சஞ்சீவி போலே யிந்த நூலைச் சொன்னேன் சண்டாளப் பயல்களுக்கு யீய
வேண்டாம்
நஞ்சு பேசில் யிந்நூல் நோய்களுக்கு நலமான நோய்களைத் தான் நாடிக்
கொள்ளும்
செஞ்சு வாருலகத்தாரிந்த நூலைக் கேட்டாலுங் ~~[illegible]~~ தொடாதே நீ கேள்வி யன்றி
மிஞ்சவே பஞ்சாரிக்கு தெண்டஞ் செய்து வேணதென மீந்தாக் காலிதனை யீயே.

204.

<u>மேகத்துக்குத் தயிலம்:-</u>

106. நிகரில்லாத் தயிலத்தின் மேகத்துக்கு நிசமான சந்தனமும் விலாமிச்சோடு
வகையான ஆவரையின் பட்டையோடு வங்க பித்தப் பலமாக வாங்கியே
பிசகாமல் ஆணி நீர் விட்டொன்றுக்கி பெருமை யொத்த கசாயத்தை வாங்
கிக் கொண்டு
நகையாமல் யெள்ளெண்ணை நாழி விட்டு நறு நண்டி வேர் பலந்தானரைத்துப்
போடே.

107. போட்டதனைக் காச்சியே மெழுகதாலுல் புகட்டியே வடித்ததனை பசிக் கேளு
நாட்டதனை முழுகி வர மேகந் தீரும் நளினமாத் தேகமது யிருளும் பாரு
புட்டதனை மேக நீர் போக வேண்டி புனிதமா மருந்தொன்று புகலக் கேளு
சாட்டதனை முன் சொன்ன பற்பத்தொன்றை சார்வாகக் கொடுத்து விடு
சாந்தமாமே.

வில்வ வேர் தயிலம்:-

108. சாந்தமா வில்வ வேர் தயிலங் கேளு தாமுன வில்வ வேர் பலந்தான் பத்து
பாந்தமா யிடித்தலப பதக்கு நீரில் பருவமாய்க் காச்சி யதை யெட்டொன்றுக்கி
போற்றெண்ணெ நாழி விட்டு சந்தனமும் பலந்தான் புகழான கசாயத்தில் அரைத்துப்
போட்டு
வாய்ந்த மெழுகாகுக் கால் வடித்துக் கொண்டு வாகாக முழுகி வர வன்மை கேளே.

109. வன்மையுடன் முழுகி வரப் பித்தம் போகும் வரிசை பெற உடம்பிலுள்ள உஷ்ணம்
போகும்
யிளமை பெற வாக்கிலைக்கு மேகம் போகும் யிரு கண்ணுந் தெளிவு தரு யிருமல் தீரும்
யிளமை தனிலுற்ற மற்ற படிப் போகும் ஒள் வறச்சியுடன் சுரங்களொழிந்து போகும்
தளமான தயிலமிது சம்பிரதாயமப்பா சாதித்தோர் பிணி தீரும் தரணியோர்க்கே.

110. தரணியுள்ள மானிடர்கள் தழைக்க வேண்டி சாத்துறேன் வெங்கையுட தயிலந் தன்னை
காணியமாய் வெங்கை பலம் பத்து வாங்கிக் காச்சி விடு தூணி நீர் யெட்டொன்றுக்க
திபனியுள்ள கசாயமதை வடித்து வாங்கி திரமான பிராச்சு பலமொன்றுக
அபனியமாய் கசாயத்திலரைத்துப் போட்டு அழகான மெழுகு பதமானவாறே.

111. வாறுக முழுகி வர வன்மை கேளு வாதமொடு சூலைகளு மிரண்டும் போகும்
பேராகப் பித்தமது மருண்டு போகும் பீனிசமு மண்டை யிடி பிரட்டல் சத்தி
மேரான வக்க முதல் நங்கிப் போகும் மெய்யெல்லாம் காந்தியுண்டாம் விஷ ரோகம்
போம்
நா ருகும் பின் சொன்ன தயிலப் போக்கு நுணுக்கமாம் பற்பத்தின் போக்கு நாறு

112. வெட்டி வேர் தயிலம்:-
போக்கான செதி யொன்று புகலக் கேளு புகழான வெட்டி வேர் பலம் பத்தாகும்
நோக்கான பதக்கு நீ ரெட்டொன்றக்கி நுணுக்கமாய் வடித்ததனை யெண்ணெ நாழி
வாக்கான அதிமதுரம் பலந் தானென்று மைந்தனே கசாயத்திலரைத்துப் போட்டு
தாக்கான யெண்ணைக் குள் கரைத்துக் கொண்டு உபதகமா யெண்ணெ பதம் தன்னில்
வாங்கே.

113. வாங்கியே முழுகி வர வரிசை கேளு மானிடர்க்கு பீனிசங்கள் மண்டை சூலை
ஓங்கியே குட்டமொடு பிறநீர்க் கோர்வை உள் மருளுங் கண் புகைச்சல் காது மந்தம்
ஏங்கியே யிளைப்புடனே மேல் கால் நோவு யியல் கெட்ட தாது செய. மெரிச்சல்
காந்தல்
நங்கியே போவதற்கு மண்டலந் தான் முழுக நேராக ஒன்றை விட்டு ஒரு நாளென்று

114. வேம்பின் தயிலம்:-
Incomplete
யெண்ணெ யென்ற யின்னமொரு தயிலஞ் சொல்வேன் யினிதான நாருண்டின் வேம்பின்
பட்டை வாங்கை
உண்ணென்று கால் துலா யிடித்துப் போட்டு ஒரு தூணி நீர் விட்டு வுலத்திக் காய்ந்து
சொன்னதொரு எட்டொன்றுய் வடித்து வாங்கி சுருதி பெற யெண்ணெ யிரு நாழி
விட்டு
நன்னியமாய் யேலமது பலந்தான் ரெண்டு (வ எடு யில்லை)

கொடி வேலி தயிலம்:-

115. நலமான கொடி வேலி பலந்தான் பத்து நன்றாக யிடித்திட்டு பதக்கு நீரில்
வலமாக காய்ந்துலத்தி யெட்டொன்றுக்கி நலமான நல்லெண்ணெ நாழி விட்டு
நியமான வெண்ணெ புன்னைக் காயளவு போட்டு நிலையான நற்சீரக மிளகு பலந்
தானென்று
செயமாகஅரைத்ததனைப் பாகில் சேர்த்து சீரான மெழுகு பதமான வாறே.

116. ஆனவுடனிது வடித்து முழுகும் போது ஆனந்த வாய்வுட வந்திரமா வாய்வு
தேனை மருந் துமூலார்கள் வாத மெல்லாம் சிறு சொரியுந் தினவு முதல் சிரங்கு வட்
டம்
போனதொரு அரையாப்புக் கிரந்தி சூலை புண் பொடிகள் பொடிப் புளலை வீக்கந்
தாக்கம்
நாளெனவே வந்த நோய் அத்தனையுந் தீரும் நல்லதொரு தயிலமடா நாடிப் பாரே

117. பாரப்பா சீரகமு மிரண்டு படி தாறும் பதமாக வடித்த நீர் பதக்கில் போட்டு
சீரப்பா யெட்டொன்றாய் கசாயம் வாங்கி தெளிவாக யெண்ணெ ரெண்டு படி தான்
சேரு
காரப்பா காருகோலரிசி பலம் ரெண்டு கசாயமிட்டுஅரைத்ததனைக் கலக்கிக் கொண்டு
ஏரப்பா மெழுகு பதமாக வாங்கி யியலாக முழுகி வரக் குணத்தைக் கேளே.

118. குணமென்று குணமெட்டு வாய்வு பத்து குட்டமொடு குஷ்டங்களையுங் குட்டமும் கேளு
மணமென்று வாந்தி பித்த சிறு சிறப்பு வாயிலில் வந்ததொரு பாண்டு கூட
கணமென்று உஷ்ணங்களுள்ள போகம் கபாலத்தில் குடான கப நீர்க் கட்டும்
பணமென்று நோய் தீரு மருந்து முண்டோ பாரிலுள்ள முளைத் தெழுந்த மூலிகைக்குள்
பாரே.

119. மூலிகைக்குள் வெகு மூலி சஞ்சீவியாக முளைத்து தேசமலை தோறும் காடு தோறும்
சாலி முதல் வெகு மூலி நாட்டுக் குள்ளே சாதகத்தை யறியார்கள் சண்டி மாண்பர்
ஆலிக்கு வயித்தியந்தான் குணத்தைக் காணன் ஆண்மையிலும் வயற் வளக்க. அலைவான்
மெத்த
சோலிக்குள் மருந்து வைக்க வேண்டாம் சொன்னேன் துறை போன யிரு நற்றின்

ஊறையப்
பா

120. நத்தைச் சூரி தயிலம் :-

ஊற்றிலே யின்னமொரு தயிலங் கேளு நறுக்குமுள்ள சூரி வித்து தூலா முக்கால் தான்
உலர்த்தியே நீர் பதக்கிலிடித்துப் போட்டு ஒரு விறகால் காய்ந்து வற்றி யெட் டொன்ருக்கி
காத்திலே வடித்தெண்ணை நாழி தான் விட்டு கற்க வகை நன்றுகச் சாற்றக் கேளு
சோத்தலே ஆறு மாத்திரைக் காடி நாழி சுக்கதிலே பலமொன்று அரைத்துப் போடே

121. ஓட்டியே மெழுகு பதமாக வாங்கி தோணவே முழுகி வர மண்டலந்தானப்பா
ஆட்டி விடு சிரந்தி குட்டம் சூலை குன்மம் மூன்று விடும் கிரணி யெல்லா முளை மூலத்தை
மாட்டியே நீர்களெல்லா வாங்கிப் போகும் வாங்காத பீனிசமும் மண்டை சூலை
நாட்டிகமாய் தீர்ந்து விடும் தயிலப் போக்கு சஞ்சீவி போலவும் தான் சாற்றி னேனே.

122. கீள்காய் நெல்லித் தயிலம் :-

சாற்றி யின்ன வகை கேளு கீழ் காய் நெல்லி சமூலமாய்க் கால் தூலாயிடித்துப் போட்டு
ஆற்று நீர் ஆனி விட்டுக் கசாயம் வாங்கி வாத்திடுவாய் எள்ளெண்ணை படி தான் ரெண்டு
வளமான சர்க்கரை தான் பலமோ அஞ்சு யேத்தியே காச்சி விடு மெழுகதாக
யியலாக முழுகி வரத் தீர் நோய் கேளே.

123. கேளடா முழுகி வரப் பித்த மென்ற தெல்லாம் சிறு கிறுப்புத் தலை சுழற்றல் வாய் நீருறல்
நாளடா பெத்த பித்தம் வெரித்த பித்தம் நலமான யெய்ப் பிளைப்பு பித்த ரோகம்
சூளடா மஞ்சள் நீர் ரெத்தம் மத்தும் சுழுத்தலுடன் உஷ்ணங்கள் குடதெல்லாம்
வேளடா மேலெரிவு கை கால் காந்தல் வெளுத்த சடக் கறப்பதனுல் விதத்தைப் பாரே.

124. சங்க வேர் தயிலம் :-

விதமான சங்க வேர்த் தயிலங் கேளு வெட்டி வந்து கால் தூலா யிடித்துப் போட்டு
பதமாகத் தானி சலம் யெட்டொன்ருக்கி பாரிலுள்ள யெண்ணை இரண்டு படி தான் சேரு
ஆதமான முளைகிலே பல மரைத்துப் போட்டு அப்பனே மெழுகு பதமான வாறே
சுரமாக வடித்துதனே முழுகும் போது சொல்லதென் குட்டமொடு சொரி சிரங்கே.

125. சொரி சிரங்குடனே கிரந்தியோடும் சூலை ரோகம் செங்கரப்பான் வண்டு கடி சில் விஷங்கள்
குபங்கு போல் வலிக்கின்ற சயபிளைப்புத் தீரும் வாதமுடன் குடிப் போமென்று
வரங் கொடுக்குஞ் சிவன் சொன்ன வார்த்தை கேட்டு ஆயி சொல்ல நான் கேட்டு வாழ்த்திவேன்
அரங்கு வாயின்னமொரு தயிலங் கேளும் அமுக்கிரய் பலம் பத்து தாக்கி வாங்கே.

126. அமுக்குரத் தயிலம் :-

வாங்கியே யிடித்ததனைப் பதக்கு நீரில் அளந்திட்டு படி யெண்ணை யதனில் சேர்த்து
ஓங்கியதோர் பழச் சாறு நாழி விட்டு யெரித்திடவே மெழுகு பத முருட்டி வாங்கி
தாங் கியே வடி கொண்டு வைத்துக் கொண்டு சுகமாக முழுகி வரசுகத்தைச் சொல்வேன்
வாங்கியெ பீனிசங்கள் பறந்து போகும் பாரிலுள்ள மண்டை யிடி பறந்து போச்சே.

127. இஞ்சித் தயிலம் :-

பார்ப்பதற்கு யின்னமொரு தயிலங் கேளு பச்சை யிஞ்சி கால் தூலா யிடித்துப் போட்டு
சிறப்புடனே புளிந்ததையுட் வடிதான் கொண்டு தெளிவான நல்லெண்ணை படிதான் விட்டு
உறப்பான பசுவின் பால் படி தான் விட்டு உருதியா மெழுகு பதமாக வாங்கி
சிறப்புடனே முழுகி வரப் பருவமாக தீரு நோய் நிசமாக நிகழ்த்துறேனே.

128. நிகழ்த்துறேன் மண்டையிடி சூலை வாதம் நிலை கெட்ட பீனிசங்களைப் பிளைப்பு
யிகழ்த்துறேன் சூலையொடு வாதம் வாய்வு யிளைப்பிருமல் நெஞ்சு குத்தல் யெரிவு மத்தும்
சிளத்திறேன் கால் கடுப்பு மெய் நோயெல்லாம் அகலுமே குட்ட மென்ற தலைக் கேளு
செகத்திலே நாடாமல் ஓடிப் போகும் செம்முள்ளி யெண்ணை தலைச் செப்புறேனே.

129. செம்முள்ளித் தயிலம் :-

செம்முள்ளி தயிலம் :- 2.3.64.

129. செப்புரேன் செம்முள்ளி பல மூ றப்பா சிறக்கவே சமூலத்தோடிடித்துப் போட்டு
உப்புரேன் ஆ வி நீர் அதிலே விட்டு யதியே யெட்டொன்று உகந்த காச்சி
அப்புரேன் அதை வடித்த யெண்ணை நாழி அதில் விட்டு மெழுகு பதமான வாறே
நப்புரேன் முழுகி வரும் காலந் தன்னில் நன்றுகத் தீரு நோய் நவிலக் கேளே.

130. நவிலக் கேள் கப மீளை சய ரோகங்கள் நாட்டாத மந்தார காசத்தோடும்
கவிலக் கேள் வாத மெல்லாங் காணுதோடும் கச ரோகக்குறை நோவு கண்ணீர்
பாச்சல்
அவிலக் கேள் புண் புரைகள் எல்லாந் தீரும் அரையாப்பு சிரங்கி முதல் அண்ட
வாதம்
மவிலக் கேள் வீக்கமொடு விஊ பாகந் தான் மாறுதமா யித் தயிலம் முழுகும்
போதே.

131. சாறணைத் தயிலம் :-
உருகவே யின்னமொரு தயிலங் கேளு உப்பான சாறணை வேர் பலந்தான் பத்து
யிருக்கவே யிடித்ததைப் பதக்கு நீரில் விட்டவித்து யெட்டொன்று யெண்ணை நாழி
மருகவே கொதித்ததை யிறக்கி வாங்கி மசக்காத மெழுகு பதமான வாறே
குருகவே வடித்ததை முழுகும் போது குடிப் போகும் வாதமொடு வாய்வுங் கூடே.

132. யிருவேலித் தயிலம் :-
கருக யிருவேலி பல மூ றப்பா கொத்தாகத் தறித்திடித்து ஆ வி நீரில்
பெருக யிட்டவித்து யெட்டொன்றுக்கி பெரியோ யெண்ணையது நாழி சேர்த்து
மேருகத் சொதித்து வத்தி மெழுகதானால் மேனியிலே பசியகை முழுகும் போதே
கோத சடல மெல்லாம் தேறந் தேரும் சீத முற வுஷ்ணங்கள் சேர்ந்த
பித்தம்
மாறுத கண் புகைச்சல் சிரசிரப்பு வாங்கி விடு மண்டலத்தில் வரிசையாமே.

133. அகில் கட்டைத் தயிலம் :-
ஆயின்னம் அகில் கட்டை பலந்தான் கேளு அப்பது தான் வாங்கி யதை ஆ வாய்ப்
பண்ணி
காயின்னம் ஆ வி நீர் யெட்டொன்றுக்கி தருவான யெண்ணையது நாழி சேர்த்து
போயின்னம் மெழுகு பதமான வாறே புகைமாக வடித்ததை முழுகும் போது
வேயின்ன நீர்த் தோச மெல்லாந் தீரும் மேகங்கள் தீரு மென்று விளம்பிடுமே.

134. அருகம் வேர் தயிலம் :-
விளம்பிடும் அருகம் வேர் பலந்தானுறு மேனி பச்சை யெல்லாந் தள்ளிப்
போட்டு
தளம்பினேன் யெண்ணூதே யிடித்த போட்டு தண்ணீர் நாழி படி யதிலே வார்த்து
குளம்பாக காச்சியே எட்டொன்றுக்கி குணமாக வடி கொண்டு யெண்ணை நாழி
பதம் போலே மெழுகு பதமான வாறில் பருவமாய் வடித்ததை முழுகுவாயே.

135. முழுகியே வரும் போது குணத்தைக் கேளு மூலத்தின் சூட்டனே கபால சூடு
தருகியே பித்த மெல்லாந் தலை செட்டோடும் தன்றுக்குள் வாத மெல்லாந் தலை
கெட்டோடும்
அருகியே வரு கிறந்தி தலை நீர்கள் அதன்று தொரு வயறெரிவு நெஞ்சு நோவு
கேருகியதோர் மேல் வரச்சி நீர்க் கடுப்பு சேர்வித்த அக்கினியுங் குறைந்து
போமே.

136. பொன்னாங்காணித் தயிலம் :-
குறைந்து போமின்னு வகை யொன்று சொல்லக் கேளு கொடுப்பை நீர் படி யொன்று
யெண்ணை யொன்றும்
தருவுன கோஉஷ்டமது பலந்தானென்று தன்றுக்குள் பசுவின் பால் விட்டே யாட்டி
எளிதாக கரைத்து வற்றி மெழுகு பதங் கண்டு யியலாகவே வடித்து யியல்பு கேளு
நயனமா முழுகி வர மண்டலத்தில் நலமாகத் தீரும் நோய் நவிலக் கேளே.

137. கேட்பதென்று பித்த மெல்லாம் கெதி கெட்டோடும் சிரசிரப்பு மண்டை யிடி வலி
நீர் தாகம்
வாள்த்த கொடு உட்ல் சுரங்கருக்கு புனங்கள் புருபாவி மேலெரிவு கை கால்
காந்தல்
தேள் போன்ற கண்ணெரிவு சிரசில் சூடு தேக வலி எரி குன்மம் தீர்ந்த பின்பும்
வாள் போன்ற கண்ணுக்குத் தெளிவுண்டாகும் மகத்தான தயிலமிது வழங்கிச் செய்யே

138. கையான் தயிலம் :-
செய்ய யின்ன மொரு சேதி கேளு சிக்கில்லா கையான் சாறு படி தானென்று
வெய்யவே கற்றாழைச் சாறு படி யொன்று விளம்புரேன் நெல்லிக்காய்ச் சாறு படி
யொன்று
உய்யவே வடி கொண்டு மூன்றும் ஒன்றாய் உருகவே யெண்ணெண்ணை படி தானென்றே
மெய்யான சாதிக்காய் பலந் தானென்று வியகுக யிடித்தரைத்து கலக்கிப் போட்டே

139. போட்டதனை மெழுகு பதந் தன்னில் வாங்கி புகைமாக வடித்ததனை முழுகும் போது
தாட்டிகமாய் கண்ணோவு தலை நோவோடும் தளமான செவி நோவு சார்ந்த பித்
தம்

ஓட்டி விடும் உடங்களுங்கள் பீனிசங்கள் ஒழிந்து விடு மென்று முனி யுரைத்த வாறு
நாட்டியுள்ளோர்க்கின்ன மொரு தயிலஞ் சொல்வேன் நலமுற சவுரிய பல நாறு
வாங்கே.

140. பலநூறு தான்டித்துத் தாளி நீரில் பக்குவமாய்ப் போட்டு வத்தி இருட்டோன்
சலமதனை வடிகொண்டு யெண்ணை நாழி சிறக்கவே விட்டு இரண்டும் சேர்ந்
தொன்றுக்கி
நலமான கருஞ்சீரகம் பலந்தாமென்று நாடி யரைத்து தருள்ளே கரைத்து யேற்றி
பலமான மெழுகு பதமான போதே பித்தர்களே வடித்து வைத்து முழுங்வாயே.

141. வாய்ப்பான வாதமொடு குட்ட மெங்கே வாதத்திலெழுந்த கபப்பாணெங்கே
சாய்ப்பான கரைப்பெங்கே கழலை யெங்கே கண்டத்தில் வக்க மெங்கே
கழல் வாத மெங்கே நேர்ப்பான நோய்களெல்லாம் அகன்று போகும் நனுக்கமா
தயிலமான்று நலமக் கேளு
சாய்ப்பான சொன்ன கபப்பட்டை தாரும் சாதகமாய்ப் பலநூறு தாக்கிடாயே.

142. __செவ்வ கபப்பட்டை தயிலம்__:-

தாக்கியே யிடித்ததனைத் தாளி நீரில் தரவாக வெந்து வடி யெட்டொன்றுக்கி
நோக்கியே பால் நாழி கூடச் சேரு நன்மை யாம் வேப்பெண்ணை படி
நாலென்று
ஆக்கியே வசம்பதுவும் பலந்தாமென்று அரைத்து கரைத்து விடு மெழுகு போலே
தாக்கியே வடித்ததனை முழுகிக் கால் நடியான வாத மெல்லாம் சுழன்று போமே.

143. __ஆய்ப் பட்டைத் தயிலம்__:-

போகவே யின்னமொரு தயிலங் கேளு புகழான ஆய்ப் பட்டை பலமு நூறு
ஆகவே யிடித்ததனைத் தாளி நீரில் அரசாக (மேல் தொடர்ச்சி இல்லை)
(அடுத்த ஏடு இல்லை. அகஸ்தியர் தயில முறை முடிவு இல்லை).

**

__மூலக் கிருனிக்கு__:-

வெள்ளெருக்கம் வேர்ப் பட்டை பசுவின் நெய்யில் எரித்து அந்தி சந்தி சாப்பிட
வும். மூலம் தீரும்.

__மூலத்துக்கு__:-

விடத்தலை சீரகம், சுக்கு, பச்சரிசி, உழுந்து, பிரண்டை, கருணைக்
கிழங்கு, கள்ளு உமிக்கு, யிதெல்லாம் மூன்று உருண்டை வெல்லம் போட்டு லேகியம்
கிண்டி பசுவின் நெய் விட்டு கிண்டி கழக் கொட்டி பிரமாணம் சாப்பிடவும். ரெத்த
மூலம் தீரும்.

செருப்புருவி யிலை, விழுதை தேங்காயளவு பசுவின் நெய் உரி, சீரகம்
பலம். ½, சர்க்கரை பலம். க, யெரித்துச் சாப்பிடவும். சகல மூலமுந் தீரும்.

__சகல கடுப்பு சகல கபிச்சலுக்கு__:-

ஆல யிளந் தளிர் அரசந் தளிர் அத்தி வேர், சாறு கோவை பிஞ்சு
மாம்பட்டைச் சாறு, சுக்கு, காசுக் கட்டி வாழைத் தண்ணீர் விட்டரைத்து கூழ் போலே
கிண்டி அந்தி, சந்தி சாப்பிடத் தீரும். பசுவின் பால் நெய் அத்திப் பட்டை, நாகப்
பட்டை, இலுவைப் பட்டை இடித்து பிட்டு வைத்து எண்ணை வார்த்துக் கொடுக்கவும்.
ஆட்டு மோர் கூட்டவும்.

ஏலம், சீரகம் பொடி செய்து பசுவின் நெய் பலம். 5, எலுமிச்ச சாறும்
சேர்த்து சாப்பிடவும் ரெத்தக் கடுப்புத் தீரும்.

__மேகத்துக்கு__:-

காரீயம், அத்தம், கல்மதம், கிலுட்டம், அப்பிரக மரமஞ்சள் கொடி வேலி
வேர், பருத்தி விரை புளியங் கொட்டை வெள்ளைக் குன்றி மணி பருப்பு தெத்தான்
விரை, ஆவாரை விரை விளாம்பிசின் கருவேலம் பிசின் வகைக்கு பலம். ½ காடி வார்
த்து அரைத்து ஐந்து நாள் அரைப்பு தேத்தாங் கொட்டைப் பிரமாணம் ஒரு சேர்
எருமை மோரில் சாப்பிடவும். மேகம். 21, தீரும்.

__கிருனி பதினெட்டுக்கு__:-

அபின் விராகனிடை. 2½, இங்கம் விராகனிடை. 2½, எலி விஷம் விராகனிடை.
க, கழக் கொட்டி பருப்பு. க இந்த பழச் சாறு விட்டரைத்து உருண்டை பண்ணி
ஒருமைத் தயிரில் கொடுக்கவும். மூன்று நாள் கொடுக்கத் தீரும்.

****

சு.ச:2.3.64.

முற்றும்

****

தேதி:- 2.3.64.
ஓலைச்சுவடியின் பெயர்: "வைத்திய முறை கட்டு-2"
உரிமையாளரின் பெயர்: ஆர்.சந்திரகாசன்,
இடம்:ராசிபுரம்; சேலம்.

*** ***

<u>கொடிப் பவுத்திரத்துக்கு:-</u>

ஈர வெங்காயம் பலம்.3, கொண்டு வந்து மேல் பிறவியை உரித்துப் போட்டு அரிந்து பசுவின் வெண்ணெ பலம்.௧, அதில் போட்டு வெந்து வருகிற போது ஒரு புரவ கேந்தில் பாசி பருப்பு அதில் நுறுக்கிப் போட்டு பொன்னிறமா வேக வைத்து மூன்று நாள் கொடுத்து ஆறு நாள் பத்தியம். ஏழா நாள் தண்ணீர் விடவும். கை கண்டது.

<u>வாதம் என்பதுக்கு மெழுகு லேகியம்:-</u>

சாதிலிங்கம் கொண்டு வந்து மூன்று நாள் காடியில் போட்டு ஊறின பிறகு எடுத்து எலுமிச்சம் பழச் சாறு விட்டு அரைத்து ஒரு நாழிகை அரைத்து குழி அம்மியில் வைத்து குதிரை நீர் விட்டு அரைக்க மெழுகு போல் ஆகும். எடுத்து வைத்துக் கொள்ளவும். வாதம் என்பதுக்கும் கொடுக்கவும்.

<u>மகோதரத்துக்கு பாண்டு ரோகத்துக்கு:-</u>

சீயக்காய் கொண்டு வந்து பச்சைத் தண்ணீரில் ரா முப்பது நாழிகை ஊறப் போட்டு சட்டியில் உரசி நுரையை வழித்தெறிந்து போட்டு இரத்து ஒரு சிறங்கை உள்ளுக்கு கொடுக்க வயறு பேதிக்கும். இப்படி நெடிவும் கொடுத்து வரவும்.

(வேறு)

சுரைச் சருகை எரித்து நீரில் குழைத்துப் பூசவும்.

<u>கிரந்திக்கு ஓடி மருந்து:-</u>

ரசம் விராகனிடை.உ, கருஞ்சீரகம் விராகனிடை. , கார்கோலரிசி விராகனிடை 4, கொள்ளியலரிசி ஒரு சிறங்கை, முருங்கைப் பூ ஒரு பிடி இதுவெல்லாம் உரலிலிட்டு இடித்துக் கொண்டு இடித்ததின் பிறகு அம்மியில் வைத்து அரைத்துக் கொண்டு ஒரு நாளுக்கு ஒரு வெருகடிப் பிரமாணம் கொடுக்கவும். ஏழு நாள் கொடுக்கவும். பத்தியம் உப்பு, புளி ஆகாது.

<u>இருமல் குட்டின் பேரில் கண்டால் மூலாண்டக் கசாயம்:-</u>

அறுகங் கிழங்கு ஒரு பிடி ஒத்தைப் பூடு ஒன்று, எழு மிளகு, கழிங்க மூன்று நறுக்கி படிக்கு தண்ணீரில் அவிச்சு அரைப்படியாக இருக்கையில் இறக்கி மிறுத்த மிளகும், பூண்டும் அரைத்து கலந்து கொடுக்கவும். இப்படி அன்றுடன்ம கொடுக்கவும். எட்டு நாள் பத்து நாள் கொடுக்கவும் தீரும்.

<u>மருந்தீட்டுக்கு மருந்து:-</u>

எருக்கின் வடக்கு போன வேர் பிடுங்கி வந்து மூன்று கொட்டைப் பாக்களவு அரைத்துப் பசுவின் பச்சைப் பாலில் கொடுக்கவும். (பாக்கு வெத்திலையும் தன் வாயாலெடுத்துப் போகும்) மருந்து விழா விட்டால் அரைப்படி பச்சைப் பால் கொடுக்கவும்.

<u>ரச கற்பூரம்:-</u>

மூன்று விராகன் ரசம், நாலு உப்பு, ஒரு சட்டியில் போட்டு அதில் குண்டு பதித்து அதில் ஒரு கிளிச்சட்டியில் போட்டு மறுசட்டி மூடி சீலை மண் செய்து அடுப்பில் வைத்து விறகிட்டு எரித்து ஒரு சாமம் எரித்து எடுத்து மூன்று நாள் கொடுத்து ஆறு நாள் பத்தியம் பறங்கி தீரும்.

<u>கிரந்திக்கு:-</u>

திப்பிலி; வசம்பு, சீனிக் காரம், கடுக்காய், வெள்ளை குந்தம் ஐந்து மருந்தும் சமன் நிறையாக நிறுத்து ஐந்து மருந்தும் சமளக உமி நீரிலே உரைத்து வழித்துப் புண்கண்ட விடமெல்லாம் தடவி ஒரு தேத்தான் விரைப் பிரமாணம் உள்ளுக்குச் சாப்பிடவும். இப்படி மூன்று நாள் கொள்ளவும் தீரும். கை கண்டது. ~~இந்த மருந்து வெள்ளைக்காரன் கை மருந்து. ஒரு முன்னிற்கவும்~~.

<u>கிரந்திக்கு ரச பற்பம்:-</u>

ரசம் விராகனிடை.4, செங்கல் கொண்டு வந்து வட்டமாய்த் துளைத்து அதில் ரசத்தை விட்டு ஒரு சட்டியில் நிறைய உப்புக் கொட்டி அதில் தளும்பாமல் வைத்து சமளக சட்டி மூடி சீலை மண் செய்து அடுப்பில் வைத்து ஒரு மரத்தின் விறகு போட்டு தொண்ணூறு நாழிகை எரித்து புகை விடாமல் மண் செய்து இறக்கி மேல் சட்டியில் இருக்கிற பற்பத்தை வழித்து எடுத்துச் சர்க்கரையில் சேர்த்து தேத்தாங்காய் பிரமாணம் அந்தி சந்தி மூன்று நாள் கொடுத்து ஆறு நாள் பத்தியம். விளக்கெண்ணெ தேய்த்து முழுகவும். இத்துக்கு கூட்டும், கறி, எலுமிச்சங்காய் ஊறுகாய் உப்பு போட்டு அவித்து தொட்டுக் கொள்ளவும். மோர் கூட்டிக் கொள்ளவும். உப்பும் கூடக் கூட்டிக் கொள்ளவும். காரம் சுருக்கிருக்கக் கொண்டல் கூட்டிக் கொள்ளவும்.

<u>மாலைக் கண்ணுக்கு மருந்து:-</u>

வாழை மரத்துப் பிசின் எடுத்து பசுவின் பாலில் உரைத்து மூன்று நாள் கண்ணில் போடவும். ஆறு நாள் பத்தியம் காக்கவும்.

எலி கடிக்கு மருந்து :-

மருக்காரை வேர் ஒரு புன்னைக் காயளவு உள்ளுக்கு கொடுத்து ஒரு சாமத்துக்கு பிறகு தலையில் நாலு குடம் பச்சைத் தண்ணீர் விட்டு சோறும் கொடுத்து விடவும் தீரும். கை கண்டது. நீர்பளிவுக்கு பற்பம் அரைக்காசு எடை கொடுக்கவும்.

அமுக்கிராங் கிழங்கை வில்லையாய் நறுக்கி முருகக் காய் வைத்து இடித்து ஒரு சட்டியில் போட்டு கருக வறுக்க அதில் நாலு பலம் ஈயம் கூடப் போட்டு வறுக்க வெள்ளையாகும். விடாமல் வறுக்கச் செந்தூர நிறம் ஆகும். அதை எடுத்துப் பசுவின் நெய்யில் அரைக்காசுயிடை கொடுக்கவும்.

இம்மல், காசம், பீனிச காசம், நீர்க் காசம், வறக் காசம், மந்தார காசம், வெந்த காசம், பித்த காசம் இவைகளுக்கு மருந்து :-

செவ்விளநீர் கொண்டு வந்து இலந்தை யிலையும், மிளகு, பொன்னரிதாரமும் மூன்றும் கூட்டி இளநீர் விட்டு அரைத்து சீலையில் ஊட்டி வாட்ட சிறு குச்சி வைத்து காய விட்டுக் குச்சியை உருவிப் போட்டு தீப் பிடித்துப் புகை குடிக்கால் போல் ஐந்து நாள் குடிக்கவும். இந்த மருந்துக்கு கூட்டு, கறி, கஞ்சி கீரை, துவரைப் பருப்பு கூட்டவும். எள்ளு கொள்ளு வாய்வு பண்டம் ஆகாது.

பறங்கி எழு கிரந்திக்கு மருந்தும் :-

முத்தின சங்கம் செடியில் விறகு சுள்ளி ஓலை போட்டு கருக்கம்பு யில்லாமல் சுட்டு மறு நாள் அந்த கருத்த வேர் பிடுங்கி வந்து உலர வைத்து இடித்து வடி கட்டி அதில் கருஞ்சீரகம், நற்சீரகம் முழுக்கிக் கலந்து வைத்துக் கொண்டு மூன்று நாள் நாலு காசுயிடை நிறுத்துக் கொடுக்கவும். உடனே ஐந்து ஆறு குடம் தண்ணீர் தலையில் வார்க்கவும்.

ஏலாதி மாத்திரை :-

நல்ல ஏலம், அதிமதுரம், சுக்கு, திருவேலி, நன்னாரி, முந்திரிப் பழம், பேரீச்சம் பழம், விலாமிச்ச வேர், கோரோசினை, தாளிச பத்திரி, சடாமஞ்சி கோட்டம் இலுப்பைப் பூ, கடுகுரோகணி, இளநீர் தண்ணீர் விட்டு அரைத்து சுண்டைக் காயளவு உருட்டி நிழலில் உலர்த்திக் கொண்டு இளநீரில் கொடுக்கும் பயித்தி சுரம் தீரும். சவிரிக் கொடி சாத்திரிட பல சனியுந் தீரும். நீரிலிட நீர்ச் சிறப்புந் தீரும். முலைப் பாலிலிட்டுத் தான் அக்குமே வாத பித்தச் தனக்கு. இஞ்சி ~~சாறு~~ சாற்றிலிட்டுக் காசினியில் மானிடருக்கு இந்த மருந்து செய்ய யென்று ஊரு.

தயில முறை தலை முழுகு :-

நயமான கொடி வேலி வேர் பலந்தானெடுத்து நன்றாக யிடித்து பதக்கு நீரிலே போட்டு சியமாக காய்ந்து வத்தி யெட்டி லொன்றாய்த் தெளிவான நல்லெண்ணெய் தான் நாழி விட்டு நிசமான வெண்ணெய் புன்னைக் காயளவுதான் மீதே போட்டு நிசமான நச்சீரகம் பலந்தான் ஒன்று சியமாக அரைத்து பாலு சேர்த்து தீபர்ன மெழுகு பதமான போதே.

ஆன யித் தயிலந் தன்னை முழுகும் போது ஆளந்த வாய்விடனே அந்திர வாய்வு
தேன் மருவு கழல் வாய்வு தெளவாத மெல்லாம் சிறு சொறியும் தினவு முதல்
கிரந்தி குட்டம்
போன தொரு அரையாப்பு கிரந்தி குலை இத்தனையும் தீரும் நல்ல தொரு
தயிலம் தன்னை நாடிப் பாரே.

கிரந்தி ஊறலுக்கு :-

சீவிப் பாகும், பச்சைக் கற்பூரம், சுக்கு, மிளகு, கடுக்காய், சித்தரத்தை, கருஞ்சீரகம், இந்துப்பு, வெள்ளுள்ளி, கல்நார், சிறுதேக்கு, பேரரத்தை, வெப்பாலையரிசி, ரசம் இடித்து ஆறு கிழி கட்டி ஆறு பொழுது கொடுத்து ஆறு நாள் பத்தியம் ஏழா நாள் தலைக்கு நீர் விடவும்.

மூலம் கிராணிக்கு மருந்து :-

நாவல் பட்டை சாறும், அதின் விதையும் அரைத்து மண் சட்டியில் மூன்று சுரசம் பன்னி சீலையில் வடி கொண்டு கொடுக்கவும். சுண்டை வற்றலோடு நிம்ப பத்திரி சுவைத்த மாங்கனி விரைச் சுளையும் சொல்லமோதகம், நெல்லி தாது களிக்கோடு வெந்தயம் மொடு யேருமே. வின்று சொன்னபடி வகைப்பியே யிள வறுப் பதாயி மிறு தனைப் பொடிக் கொள் பொடி யிது வெருகுடிப் பொடி தயிரில் கொண்டு யிட பொருமல் மந்தம் மீசின்றனை யீறி நின்றுங் கழிச்சல் சுரு மூலம் மதி சாரம் மோடு வெகு கிராணியும் அலைகாது காண். கை கண்டு யித்தனையும் வேண்டி புத்தி உள்ள பண்டிதர் தொழிலை நம்புவீர் குருவை யீசுவரி உதவும் கிறம் மருந்தெலவே செய்வீரே.

காச்சல் சுரத்துக்கு குடிநீர் :-

அரத்தை, சுக்கு, திப்பிலி, கண்டங்கத்திரி, ஆடாதோடை, முப்பிரண்டை வேர், சித்தாமுட்டி வேர், பெருமுட்டி வேர், விஷ்ணு கிராந்தி, பொன் முசுட்டை வேர், நாரத்தை யிலை, நல்ல யிலந்தை யிலை, சங்க வேர் இந்த மருந்தெல்லாம்

குடிநீர் வைத்துக் கொடுக்கவும்.

<u>பீனிசம், மந்திர காசம், பித்த காசம் மேக வெட்டைக்கு மருந்து</u>:-

நல்லெண்ணெய் படி. உ, எலுமிச்சம் பழச் சாறு படி. 1/8, நாரத்தை யிலைச் சாறு படி. 1/8, நெல்லிக்காய் சாறு படி. 1/8, கொறட்டை பழச் சாறு படி. 1/8 ஆடுதின்னாப் பாலை யிலைச் சாறு படி. 1/8, வெற்றிலைச் சாறு படி. 1/8, பொன்னாங்காணிச் சாறு படி. 1/8, சிறுகீரைச் சாறு படி. 1/8, முசுமுசுக்கைச் சாறு படி. 1/8, கையாந்தகரைச் சாறு 1/8, மிளகு பலம். $\frac{1}{2}$ செண்பகப்பூ பலம். 1/8, நச்சீரகம் பலம். $\frac{1}{2}$, வால்மிளகு பலம். $\frac{1}{2}$, கிராம்பு பலம். 1/16, தாளிச பத்திரி பலம். 1/16 அதிமதுரம் பலம். $\frac{1}{4}$, கோஷ்டம் பலம். $\frac{1}{4}$, வெட்டி வேர் பலம். $\frac{1}{2}$, விலாமிச்ச வேர் பலம். $\frac{1}{2}$, செவ்விள நீர் படி. $\frac{1}{2}$, பசுவின் பால் படி. $\frac{1}{2}$ இவை கூட்டி தயிலம் வைத்து முழுகவும்.

<u>வயத்துப் பொருமலுக்கு மருந்து</u>:-

கறிப் பிறண்டைக் கிழங்கு பிடுங்கி வந்து மேல் தோலை யெடுத்துப் போட்டு வில்லையாய் நறுக்கி அதில் பச்சை அரிசி கூட்டி இடித்து தெள்ளிப் போட்டுக் களிக் கிண்டி அந்தி சந்தி சாப்பிடவும். இப்படி ஐந்து நாள் பத்து நேரம் சாப்பிடவும். கெற்பு புச்சி, கெற்ப வாய்வு தீர்ந்து பிள்ளை உண்டாம். ஒன்பது நாள் பத்தியம்.

<u>சிறு பிள்ளைக்கு பிறளி வலிக்கு</u>:-

பிறண்டையிலையை வாட்டிப் பிளிந்து மூன்று நாள் கொடுக்கவும். பிறளி தீரும். கை கண்டது.

<u>ஈழய பற்பம்</u>:-

காரீயம் பலம். 5, கொண்டு வந்து நறுக்கி அதில் அமுக்கிறா வேர் கிழங்கு கொண்டு வந்து வில்லையாய் நறுக்கி சுக்குப் போல் உலர வைத்து இடித்து இரண்டையும் ஒரு சட்டியில் போட்டு ஒரு மரத்தின் விறகு யிட்டு யெரித்து கருகக் கிண்டி வறுக்க கருகி உருகி வரும். மூன்று சாமம், நாலு சாமம் கிண்டி வறுக்கக் கறுப்பாய் வரும். மறுபடி விடாமல் வறுக்க வெள்ளையாய் விழும். பின்னும் விடாமல் வறுக்க மஞ்சள் நிறமாய் வரும். பின்னும் வறுக்க சிவந்து திருச் சூரணம் போல் வரும். அந்தப் பதத்தில் வழித்து எடுத்துக் கொண்டு ஒரு சிமிளில் அடைத்து வைத்துக் கொண்டு ஒரு பணவிடை சுப்பித் தேனி லாகுதல், பசுவின் நெய்யிலாகுதல் குளப்பிக் கொடுக்கத் தீரும். வியாதி நீரளிவு, ஆசனக் கடுப்பு, ப்ரமேகம் இது முதலானது அந்தி சந்தி பத்து நேரம் கொடுக்கத் தீரும். இது கை கண்டது.

<u>காமாலை, சோகை பாண்டு ரோகம்</u>:-

கொடிக் கள்ளி வேர் பிடுங்கி வந்து மிளகு உள்ளி கூட்டி அரைத்து சிறு கொட்டைப் பாக்களவு கொடுக்கவும். மிகுந்து பேதி கண்டால் மோரும், சோறும் கொடுக்கவும். அதிகம் மிஞ்சினால் ஆவிரை யிலை அவித்து பிழிந்துக் கொடுக்கவும். நிற்கும்.

<u>வேறு மருந்து</u>:-

பிரண்டையிலையும், கொடிக் கள்ளி வேர், மிளகு உள்ளியும், புழுங்கல் அரிசியும் கூட்டி அரைத்து பசுவின் நெய்யில் அடை சுட்டு ஒரு தட்டு எடை கொடுக்கவும். பேதி காணும். மோரும் சோறும் கொடுக்கவும். மறுபடி ஆவிரை யிலை அவித்து பிழிந்துக் கொடுக்கவும்.

<u>மேல் தலை வாயுவுக்கு மருந்து</u>:-

கோட்டம், சதகுப்பை, எலுமிச்சம் பழச் சாறு, துத்தம், துருசு, காட்டு அரிதாரம் சரி கூட்டி குழி அம்மியில் அரைத்து மறுபடி வட்டிகா ரில் வைத்து சங்கு கொண்டு உரைத்து சிமிளில் வைத்துக் கொண்டு கண்ணில் போடவும் தீரும்.

கவுரூய் உருட்டி உலர்த்திக் கொண்டு முலைப் பாலில் உரைத்துப் போடவும். இதுக்கு தீரும் வியாதி கண், புகைச்சல், பூச்சி வெட்டு, ரெத்த படலம், சுக்கிறன் இது வெல்லாந் தீரும்.

<u>பூச்சி வெட்டுக்கு மை</u>:-

துத்தம் துருசு காட்டு அரிதாரம், காசுக் கட்டி, எலுமிச்சம் பழச் சாறு விட்டு அரைத்து வெற்றிலையில் நல்லெண்ணெ தடவிப் பிளிந்து அரைத்துக் கொள்ளவும்.

<u>வேறு மருந்து</u>:-

சித்தா மணக்கு எண்ணை படி. $\frac{1}{2}$, தேங்காய். 3, வரிக்கூத்தாளை, சிறுகுறிஞ்சா யிலை ஈர வெங்காயம் பலம். 3, வெள்ளை வெங்காயம் பலம். 3, திருகு கள்ளி பால் படி. 1/16, கொடிக் கள்ளிப் பால் படி. 116, வெடியுப்பு, இந்துப்பு, தேங்காய் பிளிந்து பால் எடுத்து சிறு குறிஞ்சா சாறு பிளிந்து இரண்டும் சரி கூட்டி ஒரு சட்டியில் கிண்டி வேக வைத்து வத்தி வாறபோது அதில் கடை மருந்தை அரைத்துக் கூடப் போட்டு விளக்கெண்ணையும், பாலும் விட்டுக் கிண்டி மெழுகு பதத்தில் இறக்கி வைத்துக் கொள்ளவும். தேத்தாம் விரைப் பிரமாணம் கொடுக்கவும். மிகுந்து பேதி கண்டால் ஆவிரை யிலை அவிச்சுக் கொடுக்கவும். மோரும் சோறும் கொடுக்கவும். பச்சைத் தண்ணீர் கொண்டு மேல் குளிக்கவும். இதுக்கு தீரும் வியாதி கரப்பன், விஷ பாண்டு, சோகை, காமாலை, பித்த சுரம், வாத சுரம், குருப்பை சரீரத்தில் வீக்கம், அடி வயறு, சுரப்பு, கால் கை சுரப்பு தீரும். இதுக்கு ஆகாதது நல்லெண்ணை, வேப்பெண்ணை ஆகாது. விளக்கெண்ணெ முழுகவும்.

மாந்தத்துக்கு உருண்டை:-

நச்சீரகம், சுண்டியிலை அதின் வேர் சமன் கொண்டு அரைத்து சுண்டைக் காய் பிரமாணம் உருண்டை உருட்டி வென்னீரில் கொடுக்கவும்.

சீரகத் தயிலம்:-

பாரப்பா சீரகம் படிதான் ரெண்டு வாங்கி பத்தமாகவே யிடித்து புகக்கு நீரில் போட்டு வசமாக எட்டிலொன்றுய் வத்தக் காய்ச்சி வளமான நல்லெண்ணை நாழி விட்டு காரப்பா கார்போக அரிசி பலந்தான் ரெண்டு வாங்கி கிசாய யிட்டு அரைத்து கலக்கிக் கொண்டு பாரப்பா மெழுகு பதமான போது பாங்காக முழுகி வரக் குணமே கேளீர்.

குணமென்ன குன்ம மெட்டும் வாய்வ பத்தம் குட்டமொடு தழு கணையும் மண மென்ன வாந்தி பித்தம் சிரசிறப்பு வாயுவிலுல் கபாலத்த கபாலத்தில் குடான கபானி கட்டு மூல உஉட்டண ரோகம் வந்த தொரு சோகை பாண்டு குன்மம் கன்டி மென்ன உஉட்டண ரோகம் கவனிகட்டும் பன்மமென்ன நோய் தீர மருந்த முண்டோ பாரில் உள்ள முனைத் தெருந்த மூலிக்கைக்குள்ளே பேரே.

மண்டைக் குத்துக்கு நிமைக் குத்துக்கு தயிலம்:-

காஞ்சிரையிலைச் சாறு உழக்கு, வேப்பெண்ணை படி நாழி, உள்ளி சுக்கு, மிளகு, நச்சீரகம் வகைக்கு பலம் ½ முறுக்கிப் போட்டு பதத்திலே வேக வைத்து முழுகவும்.

ஏலாதி மாத்திரை:-

ஏலரிசி, அதிமதுரம், சுக்கு ஒடு வேலி, நன்னாரி வேர், முந்திரிப் பழம், பேரீச்சம் பழம், விலாமிச்சை வேர், கோரோசனை, தாளிசை பத்திரி, சடாமஞ்சி, கோட்டம் இலுப்பைப் பூ, கடுகுரோகணி, இளநீர் விட்டு அரைத்து சுண்ட விளங்காய் பிரமாணம் உருட்டிக் கொள்ளவும்.

முருகாதி மாத்திரை:-

ஆர்வாள முத்து, எருமைச் சாணியில் அவித்து எடுத்துக் கழுவிப் போட்டு உடைத்து இலை நஞ்சு எடுத்துப் போட்டு மறுபடி பசுவின் பாலில் அவித்து தண்ணீர் விட்டுக் கழுவிப் போட்டு கடுகு திப்பிலி, மிளகு, சுட்டி அரைத்துக் கரிப்பான் சாறு விட்டரைத்துக் குண்டு மணிப் பிரமாணம் உருட்டி உலர வைத்துக் கொள்ளவும். அநுபானம் சுக்கு கசாயத்தில் ஒரு உருண்டை உரைத்துக் கொடுக்கவும். பேதி ஆகும். மாத்திரை மேலில் தண்ணீர் விட்டு மோரும், சோறும் கொடுக்கவும். சுக பேதிக்குப் பசுவின் பாலில் கொடுக்கவும். மிகுந்து பேதிகண்டால் முருங்கையிலையை வதக்கி மோரு விட்டு ஆவிச்சு கொடுக்கவும். வெறு ஏாவும் அவிச்சுக் கொடுக்கவும்.

****

சு:ச:2.3.64.

முற்றும்

****

Verified & compared

7/1/65

354